114

114

என்ஈபி/சிஓ/
ஜிஈஎன்/02.

34

21.02.     3.

சுற்றறிக்கை இல: 01/2003.

சகல கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர்களுக்கும்,

<u>கூட்டுறவுச் சங்கங்கள் நிலையான சொத்துக்களை
கொள்வனவு செய்தலும், விற்பனை செய்தலும்.</u>

கூட்டுறவுச் சங்கங்கள் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், உடைமையாக்குதல், மூலதனச் செலவாகக் கணிக்கப்படும் நிலையான சொத்துக்கள் மீது மேற்கொள்ளப்படும் செலவினங்கள் தொடர்பாக எனது 08/97 இலக்க 11.11.1997, 01/01 இலக்க 24.01.2001, 03/01 இலக்க 09.08.2001, 03/02 இலக்க 18.07.2002 ஆகிய திகதிகளில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கங்கள் தமது நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக நிலையான சொத்துக்கள் கொள்வனவு, விற்பனை, உடைமையாக்கல், நிலையான சொத்துக்கள் மீது மேற்கொள்ளப்படும் மூலதனச் செலவாகக் கணிக்கப்படும் செலவுகள் ஆகியவை தொடர்பாக அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களிற்கான அனுமதிகளை துரிதமாக வழங்குவதற்காக பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

1. 08/97 இலக்கமும் 11.11.1997ந் திகதியும் கொண்ட சுற்றறிக்கையின் அட்டவணை என்னும் பந்தியில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் முற்றாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

2. 03/01 இலக்கமும் 18.07.2002ந் திகதியும் கொண்ட சுற்றறிக்கை முற்றாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

3. மேற்குறிப்பிடப்பட்ட 01, 02ம் பந்தியில் இரத்துச் செய்யப்பட்ட விடயங்களுக்குப் பதிலாக கூட்டுறவு விதியின் 48(1), 48(2) பிரிவுகளின் கீழ் அசைவுள்ள, அசைவற்ற நிலையான சொத்துக்களின் கொள்வனவு, விற்பனை, உடைமையாக்கல், மூலதனச் செலவாகக் கணிக்கப்படும் நிலையான சொத்துக்கள் மீதான செலவினங்களிற்கு பின்வரும் விபரப்படி அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

   3.1. ரூ.100,000/- விற்கு மேற்படாத தொகைகளுக்கான அனுமதி உதவி ஆணையாளரால் வழங்கப்படலாம்.
   3.2. ரூ.100,000/- விற்கு மேற்படும் தொகைக்குரிய விண்ணப்பங்கள் யாவும் உதவி ஆணையாளர்களின் முறையான சிபாரிசுடன் எனது அனுமதி பெறுவதற்காக முன்னளிக்கப்படல் வேண்டும்.
   3.3. இது தொடர்பாக தங்கள் மாதாந்த கூட்டங்களில் சகல உத்தியோகத்தர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்/பொது முகாமையாளர்களின் கவனத்திற்கும் கொண்டு வரவும்.

ஆ. சுப்பிரமணிய சர்மா, o/c
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும். (வதிமா)